வடமாகாணக் கல்வித் திணைக்களத்துடன் இணைந்து
தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்
தவணைப் பரீட்சை, மார்ச் - 2020
Conducted by Field Work Centre, Thondaimanaru
In Collaboration with Provincial Department of Education
Northern Province
Term Examination, March - 2020
FWC

| தரம் :- 13 (2020) | இந்து சமயம் - I | நேரம் : 2 மணித்தியாலம் |
|---|---|---|

எல்லா வினாக்களுக்கும் விடை தருக.

➢ **01 தொடக்கம் 05 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் ஐந்து விடயங்கள் வீதம் தரப்பட்டுள்ளன. அவற்றுள் ஒன்று ஏதோவொரு காரணத்தினால் ஏனையவற்றுடன் பொருந்தாது. பொருந்தாததைத் தெரிவு செய்க.**

01) 1. வேதம் 2. இதிகாசம் 3. புராணம்
4. ஆகமம் 5. தம்பதம் ( )

02) 1. காஞ்சி புராணம் 2. தணிகை புராணம் 3. கேது புராணம்
4. தட்சிண கைலாய புராணம் 5. திருவொற்றியூர் புராணம் ( )

03) 1. நாச்சியார் திருமொழி 2. பெருமாள் திருமொழி 3. பெரிய திருமொழி
4. வேதாந்த சங்கிரகம் 5. திருவாய் மொழி ( )

04) 1. தீபாவளி 2. தைப்பொங்கல் 3. வருடப்பிறப்பு
4. போகிப் பண்டிகை 5. மாசிமகம் ( )

05) 1. கண்ணகி தெய்வம் 2. பெரிய தம்பிரான் 3. முத்துமாரியம்மன்
4. பேச்சியம்மன் 5. திரௌபதை அம்மன் ( )

➢ ***06* தொடக்கம் *10* வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் ஐந்து சோடிச் சொற்கள் தரப்பட்டுள்ளன. அவற்றுள் ஒரு சோடியிலுள்ளவை. ஒன்றுடன் ஒன்று பொருந்தவில்லை. பொருத்த அச்சோடிச் சொல்லைத் தெரிவு செய்க.**

06) 1. வரலட்சுமி விரதம் - ஆவணி பூரணைக்கு முதல் வெள்ளி
2. சிவராத்திரி - மாசி தேய்பிறைச் சதுர்த்தசி
3. விநாயகசஷ்டி - கார்த்திகை தேய்பிறை பிரதமை
4. கந்தசஷ்டி - ஐப்பசி தேய்பிறை பிரதமை
5. வைகுண்ட ஏகாதசி - மார்கழி வளர்பிறை ( )

07) 1. சரசோதி மாலை - போசராச மன்னன்
2. இரகு வம்சம் - வித்துவ சிரோன்மணி
3. கதிரை சூலன் கோவை – நல்லூர் சின்னத்தம்பி
4. யாழ்ப்பாண வைபவமாலை – மயில் வாகனப்புலவர்.
5. பிள்ளையார் கதை - புலோலி வைத்திலிங்க தேசிகர் ( )

08) 1. ஆண்டாள் - நாச்சியார் திருமொழி
2. திருமங்கையாழ்வார் - பெரிய திருமொழி
3. குலசேகர ஆழ்வார் - பெருமாள் திருமொழி
4. திருமங்கையாழ்வார் - 3ம் திருவந்தாதி
5. நம்மாழ்வார் - திருப்பாவை ( )

09) 1. கீரிமலை - நகுலேஸ்வரம்
2. மன்னார் - திருக்கேதீச்சரம்
3. திருகோணமலை - ஸ்ரீ புன்னைச்சோலை அம்மன் ஆலயம்.
4. மாத்தளை - முத்துமாரியம்மன் ஆலயம்
5. நல்லூர் - வீரமாகாளியம்மன் ஆலயம் ( )

10) 1. அதிபதி - பூதகணம்
2. மந்திரம் - ஓம்கணேசாயநமக
3. துணை - புத்தி – சித்தி
4. பெற்றோர் - சிவபெருமான், பார்வதி அம்மாள்
5. வாகனம் - மயில் ( )

➢ **11 தொடக்கம் 15 வரையுள்ள ஒவ்வொன்றிலும் "அ", "ஆ" என்னும் நிரல்களின் கீழ் சில விடயங்கள் தரப்பட்டுள்ளன. "அ" நிரலுக்கு ஏற்ற விதத்தில் "ஆ" நிரலில் உள்ள விடயங்கள் பொருத்தமாக ஒழுங்குபடுத்தப்பட்டுள்ள சேர்மானத்தைத் தெரிவு செய்க.**

11) 1. பிருததீஸ்வரர் கோயில் A- முதலாம் நரசிம்மன்
2. பல்லாவரம் B- இராஜேந்திர சோழன்
3. பெரிய கற்றலி C- இராஜசிம்மன்
4. வானவன் மாதேவீச்சரம் D- மகேந்திரவர்மன்
5. மா மல்லபுரம் ரதக்கோயில் E – இராஜ ராஜசோழன்

1. EACDB 2. EDCBA 3. DBECA 4. ABCED 5. ECDBA ( )

12) 1. சங்கரர் A – மாண்டுக்கிய காரிகை
2. இராமானுஜர் B – மத்துவ பாஷ்யம்
3. மத்துவர் C – மகாபாஷ்யம்
4. பாதராயனர் D – ஸ்ரீ பாஷ்யம்
5. கௌடபாதர் E – பிரம்மசூத்திரம்

1. CDBAE 2. AECDB 3. CDAEB 4. CDBEA 5. BCDAE ( )

13) 1. சாங்கியம் A – கௌடபாதர்
2. யோகம் B – கௌதமர்
3. நியாயம் C – கணாதர்
4. வைசேஷிகம் D – பதஞ்சலி
5. வேதாந்தம் E – கபிலர்

1. EDBCA 2. BEACD 3. BACDE 4.EDCBA 5. BEDCA ( )

14) 1. திருக்களிற்றுப்படியார் A – 53 வெண்பா
2. உண்மை விளக்கம் B – 13 வெண்பா
3. வினா வெண்பா C – 45 செய்யுள்
4. கொடிக்கவி D – 100 வெண்பா
5. திருவுந்தியார் E – 4 வெண்பா

1. CBADE 2. DAEBC 3. DABEC 4. ECADB 5. AEDBC ( )

15) 1. யாழ்நூல் A – காளிதாசர்
2. இராமசரிதமானம் B – துளசிதாசர்
3. சிவானந்த நடனம் C – விபுலானந்தர்.
4. சா. குந்தலம் D – ஆனந்த குமாரசாமி
5. விஷ்ணுசித்தீயம் E – கிருஷ்ணதேவராயர்.

1. CDBAE 2. CBDEA 3. BEDAC 4. CBDAE 5. CBAED ( )

➢ **16 தொடக்கம் 40 வரையுள்ள வினாக்களுக்கு ஒவ்வொன்றுக்கும் அதன் கீழே தரப்பட்டுள்ளவற்றுள் மிகப்பொருத்தமான விடையைத் தெரிவ செய்க.**

16) சிதம்பர மான்மியத்தை விளக்கும் புராணங்கள் ஒன்று
1. சேக்கிழார் புராணம் 2. கோயிற் புராணம் 3. கந்தபுராணம்
4. பெரிய புராணம் 5. அரிச்சந்திர புராணம் ( )

17) "தெளிவு குருவின் திருமேனி காண்டல்…………." என்ற பாடலடி இடம் பெறும் நூல்.
1. திருமந்திரம் 2. திருமுருகாற்றுப்படை 3. பெரியபுராணம்
4. கந்தபுராணம் 5. திருக்குறள் ( )

18) ஆணவத்தின் குணங்களில் அல்லாதது ஒன்று
1. விகற்பம் 2. கற்பம் 3. குரோதம்
4. மோகம் 5. அழுக்காறு ( )

19) வைசேடிக சூத்திரத்தின் ஆசிரியர்
1. கணநாதர் 2. சோமநாதர் 3. பதஞ்சலா
4. மத்துவர் 5. கபிலர் ( )

20) கோயில் என்று சிறப்பாக அழைக்கப்படும் திருத்தலம்
1. திரிபுவனேஸ்வரம் 2. சிதம்பரம் 3. தஞ்சைப்பெருங்கோயில்
4. ஜராவதேஸ்வரம் 5. கங்கை கொண்ட சோழஸ்வரம் ( )

21) விக்கிரகம் அமைப்பதற்குரிய மூலப்பொருள் பற்றிக் கூறும் நூல்.
1. மான சாரம் 2. மய மதம் 3. வாஸ்த்து சாஸ்திரம்
4. விஷ்ணுதர் மோத்திரம் 5. சரஸ்வதீபம் ( )

22) மாயைக்கு ஆபரணம், விஷேபம் என்ற இயல்புகளை முன் வைத்தவர்.
1. இராமானுஜர் 2. சங்கரர் 3. மத்துவர்
4. பாதராயனர் 5. பாஷ்கரர் ( )

23) பஞ்சலோகத்தில் முதன் முதலில் படிமக்கல்லை வார்க்கப்பட்ட காலம்
1. சங்க காலம் 2. பல்லவர் காலம் 3. சோழர் காலம்
4. நாயக்கர் காலம் 5. சங்கமருவிய காலம் ( )

24) 20ம் நூற்றாண்டில் இலங்கையில் தோன்றிய பத்திரிகைகளில் அடங்காதது.
1. சைவசித்தாந்த பானு 2. விவேகானந்தர் 3. சிவதொண்டன்
4. இந்து ஒளி 5. மெய்கண்டார் நெறி ( )

25) குற்ற நிவர்த்தியின் பொருட்டு ஆலயங்களில் நிகழும் கிரியை
1. ஸ்தக நியாசம் 2. ஹர்ஷணம் 3. பிரதிஷ்டை
4. உற்சவம் 5. பிராயச்சித்தம் ( )

26) மனித வாழ்க்கையின் நான்கு படிநிலைகளாவன.
1. அறம், பொருள், இன்பம், வீடு
2. தானம், தர்மம், கொடை, வேள்வி
3. பிராமணர், சத்திரியர், வைசியர், சூத்திரர்
4. சாலோகம், சாமீபம், சாரூபம், சாயுச்சியம்
5. பிரமச்சாரியம், கிருகஷ்தம், வனப்பிரஸ்தம். சந்நியாசம் ( )

27) யாழ்ப்பாண சைவபரிபாலனசபை ஆரம்பிக்கப்பட்ட ஆண்டு
1. 1888 2. 1930 3. 1902
4. 1992 5. 1955 ( )

28) தமிழ் நாட்டில் தைப்பொங்கலுக்கு முதல் நாள் கொண்டாடப்படும் பண்டிகை
1. போகிப் பண்டிகை 2. நவராத்திரி 3. ஆடிப்பிறப்பு
4. தீபாவளி 5. சித்திரைவருடப்பிறப்பு ( )

29) சிவனது பரம்பொருள் தத்துவத்தைக் காட்டும் திருவுருவம்
1. நடராஜர் 2. லிங்கோற்பவர் 3. தட்சணாமூர்த்தி
4. சோமஸ்கந்தர் 5. திரிபுராரி ( )

30) அறிவு, நம்பிக்கை, கலை, ஒழுக்கம், சட்டம், பழக்க வழக்கம் என்பவற்றின் முழுமைத்தொகுதி
1. பண்பாடு 2. நாகரிகம் 3. சித்தாந்தம்
4. ஆன்மீகம் 5. கலாசாரம் ( )

31) வைணத்தில் ‘ வேதம் தமிழ் செய்த மாறன்’ எனப் போற்றப்படுபவர்
1. பூதத்தாழ்வார் 2. தொண்டரடிப் பொடியாழ்வார் 3. நம்மாழ்வார்
4. பெரியாழ்வார் 5. மதுரகவியாழ்வார். ( )

32) மெய்கண்டதேவர் முத்தி பெற்ற தினம்
1. ஐப்பசிச் சுவாதி 2. புரட்டாதி பூரம் 3. ஆவணி உத்தரம்
4. சித்திரை அத்தம் 5. சித்திரை சதயம் ( )

33) உபநிடதங்களைத் தொகுத்து பிரம்ம சூத்திரம் என்ற பெயரில் ஆக்கியவர்
1. வேதவியாசர் 2. யக்ஞவல்கியர் 3. நிம்பாகர்
4. பாதராயணர் 5. நாரதர் ( )

34) சித்தாந்த சாஸ்திரங்களில் மிகக் குறைந்த வெண்பாக்களில் அமைந்த நூல்
1. உண்மை விளக்கம் 2. சிவஞான சித்தியார் 3. சிவஞானபோதம்
4. கொடிக்கவி 5. சிவப்பிரகாசம் ( )

35) அட்டாங்க யோகம் 03 அடங்கும் தொகுதி
1. இயமம், நியமம், ஆசனம் 2. அணிமா, லகிமா, மூலாதாரம்
3. தியானம், யோகம், கரணம் 4. நிட்டை, மணிப்பூராடகம், யோகம்
5. ஆசனம், மூலாதாரம், சுவாதினப்பானம் ( )

36) இராஜசிம்ம பல்லேஸ்வரம் என அழைக்கப்படும் கோயில்
1. மாமல்ல புரக் கடற்கரைக் கோயில்
2. திருச்சி குடைவரைக் கோயில்
3. காஞ்சி கைலாச நாதர் கோயில்
4. பனைமலைக் கோயில்
5. தர்மராஜரதக் கோயில் ( )

37) திருமணச் சடங்கில் ஒதத்தகுந்த வாழ்வியல் வழிகாட்டியாகவும் பணபாட்டின் குறியீடாகவும் கருதப்படும் அறநூல்களில் ஒன்று
1. ஆத்திசூடி 2. கொன்றை வேந்தன் 3. திருக்குறள்
4. நாலடியார் 5. தர்மசாஸ்திரம் ( )

38) யோக நூலாகவும் பக்தி நூலாகவும் தத்துவ இலக்கியமாகவும் போற்றப்படுவது
1. சிவஞானபோதம் 2. பகவத்கீதை 3. திருமந்திரம்
4. மகாபாரதம் 5. இராமாயணம் ( )

39) நடராஜரை 'ஆடவல்லான்' எனப் போற்றியவர்கள்
1. பல்லவர் மன்னவர்கள் 2. சோழ மன்னவர்கள் 3. சாலுக்கிய மன்னர்கள்
4. பாண்டிய மன்னர்கள் 5. விஜய நகர நாயக்க மன்னர்கள் ( )

40) மாசி மாத கிருஸ்ண பட்சத்தில் சதுர்த்தசி திதியில் அனுஸ்டிக்கப்படும் சிவவிரதங்களில் ஒன்று
1. திருவெம்பாவை 2. கேதாரகௌரி விரதம் 3. சிவராத்திரி
4. பிரதோசம் 5. திருவாதிரை ( )

➢ **மேல்வரும் பகுதியில் A தொடக்கம் O வரையில் தரப்பட்டுள்ள சொற்களுள் இவ்விரண்டு சொற்கள் குறிப்பிட்டதொரு விடயத்தோடு தொடர்புடையவை அவற்றின் பொருத்தப்பாட்டின் அடிப்படையில் 41-45 வரையுள்ள ஒவ்வொரு வினாவுக்கும் பொருத்தமான சேர்மானத்தைத் தெரிவு செய்க.**

| | | | | |
|---|---|---|---|---|
| A<br>பிரதிஷ்டை | B<br>சிலாபரீட்சனம் | C<br>சுங்கீர்ணஜாதி | D<br>பண்டு நால்வர் | E<br>சித்திரகாரப்புலி |
| F<br>கிடத்தல் | G<br>மயமதம் | H<br>இருத்தல் | I<br>உற்சவம் | J<br>சின் முத்திரை |
| K<br>தெற்குநோக்கிய திசை | L<br>விசித்திரசித்தர் | M<br>கர்சனம் | N<br>மேவல் | O<br>மானசாரம் |

41) ஆகமக் கிரியை மரபுடன் தொடர்புடைய தொகுதி
1. I N M 2. O A G 3. F A I 4. A I M 5. A I N
( )

42) பல்லவர் கால மன்னனாகிய மகேந்திரவர்மனுடன் தொடர்புடைய தொகுதி
1. C E L 2. L O E 3. C L D 4. L E B 5. E B A
( )

43) சைவ சித்தாந்தம் கூறும் கன்மத்துடன் தொடர்புடைய தொகுதி
1. H A N 2. F H N 3. N O F 4. M N F 5. I M N
( )

44) விக்கிரகக் கலையுடன் தொடர்புடைய தொகுதி
1. O M G 2. F B G 3. O A F 4. F G M 5. B G O
( )

45) தட்சணா மூர்த்தியுடன் தொடர்புடைய தொகுதி
1. J C K 2. H J C 3. J D K 4. J D A 5. K A M
( )

➢ ***46 – 50வரையுள்ள ஒவ்வொரு வினாவிலும் ஒரு தலைப்பின் கீழ் ஐந்து விடயங்கள் தரப்பட்டுள்ளன. அவற்றுள் தலைப்புக்கு மிகப் பொருந்தாததைத் தெரிவு செய்க.***

46) நாயக்க காலம்
1. இந்துசமய மறுமலர்ச்சிக்கு வழி அமைத்தவர்கள் விஜய நகர மன்னர்கள் எனலாம்.
2. நாயக்க மன்னர் சமயப் பொறையைக் கடைப்பிடித்தனர்.
3. வைணவரிடையே வடகலை, தென்கலை என்ற இரு பிரிவுகள் ஏற்பட்டன.
4. நாயக்கர் காலத்திலே மதுரைவீரன் என்ற வழிபாடும் சக்தி வழிபாடும் தலையெடுத்தன.
5. நாயக்கர் காலத்தில் நாதமுனிகளால் நாலாயிரம் திவ்வியம் தொகுப்பட்டது.

( )

47) கௌமாரம்

1. முருகன் குறிஞ்சி நிலத்தவரான வேடவருக்கு குல தெய்வம்
2. சங்கமருவிய கால இலக்கியங்களில் ஒன்றான திருமுருகாற்றுப்படை முருகன் புகழ்பாடும் இலக்கியமும் ஆகும்.
3. குமரக் கடவுளை முழுமுதற் பரம் பொருளாய் ஏற்று வழிபடும் சமயமே கௌமாரம்
4. குமரக் கடவுளின் அருட்திறன் உரைக்கும் முதனூல் குமார தந்திரமாகும்.
5. தமிழ் நாட்டில் முருக வழிபாட்டுக்குரிய தலங்களில் முக்கியமானவை ஆறுபடை வீடுகளாகும்.

( )

48) புராணங்கள்

1. நண்பர் போல் அறிவுரை வழங்குவது
2. கோவில் வழிபாடு, உருவ வழிபாடு பற்றிய கருத்துக்கள் இடம் பெற்றுள்ளன.
3. அரசர்கள் வரலாற்றை மட்டுமே கூறுவது.
4. அறநெறிப் போதனைகளை வழங்குவது.
5. இந்து இலக்கிய மரபிற்கு அடிப்படையாக அமைவது.

( )

49) மத்துவர்

1. பாகவத புராண விளக்க நூல் எழுதியமை.
2. கன்னடத்தில் ஹரிதாசர்களை உருவாக்கியமை.
3. சகுணப் பிரமத்தை முதன்மைப்படுத்தியமை.
4. அத்வைத வேதாந்தத்தை நிறுவியமை.
5. அச்சுதப்பிரேஹேஷரை குருவாக ஏற்றமை. ( )

50) கடையிற் சுவாமிகள்

1. இராமநாத புரத்தில் ஆட்சி செய்த சிற்றரசர் பரம்பரையில் உதித்தவர்.
2. நீதிபதியாகக் கடமையாற்றியவர்.
3. நரசிங்க பாரதியாரின் உத்தம சீடன்
4. முத்தியானந்தர் என்னும் தீட்சாநாமம் கொண்டவர்.
5. குழந்தைவேல் சுவாமிகளை உத்தம சீடராக கொண்டவர்.

(50 x 2 = 100 புள்ளிகள்)

**வடமாகாணக் கல்வித் திணைக்களத்துடன் இணைந்து**
**தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்**
**தவணைப் பரீட்சை, மார்ச் - 2020**

**Conducted by Field Work Centre, Thondaimanaru**
**In Collaboration with Provincial Department of Education**
**Northern Province**
**Term Examination, March - 2020**

FWC

| தரம் :- 13 (2020) | இந்து சமயம் - II | நேரம் : 3 மணித்தியாலம்<br>மேலதிக வாசிப்பு நேரம் 10 நிமிடங்கள் |
|---|---|---|

- **பகுதி I இலிருந்து எவையேனும் இரண்டு வினாக்களையும், பகுதி II இலிருந்து எவையேனும் மூன்று வினாக்களையும் தெரிவு செய்க. எல்லாமாக ஐந்து வினாக்களுக்கு விடை எழுதுக.**

## பகுதி - I

01) இந்து நாகரிக வளர்ச்சியில் மகா புராணங்கள் கொண்டுள்ள முக்கியத்துவத்தை மேல்வருவனவற்றின் அடிப்படையில் விளக்குக?

(அ) பொருள் மரபு

(ஆ) தத்துவ மரபுகள்

(இ) முக்கியத்துவம்

(6 + 6 + 8 = 20 புள்ளிகள்)

02) தமிழகத்தில் பல்லவ மன்னர்களின் கட்டிடக்கலை வளர்ச்சியினை அடிப்படையாகக் கொண்டு பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.

(அ) அரசர் பணிகள்

(ஆ) பிரதான வளர்ச்சிக்கட்டங்கள்

(இ) நுண்கலைகள்

(6 + 8 + 6 = 20 புள்ளிகள்)

03) இலங்கையின் இந்துசமய வளர்ச்சிக்கு சுவாமி விபுலானந்தர் ஆற்றிய பங்களிப்புக்களை ஆராய்க.

(அ) வாழ்க்கை வரலாறு

(ஆ) சமயப்பணிகள்

(இ) கல்விப்பணிகள்

(6 + 7 + 7 = 20 புள்ளிகள்)

## பகுதி - II

04) நாட்டார் கலைகளில் காவடி பெறும் முக்கியத்துவத்தை விளக்குக?

(20 புள்ளிகள்)

05) ‘இந்து சமய வளர்ச்சியில் ஊடகங்களின் பங்களிப்பு, முக்கியமானதாகும்’. இக் கூற்றினடிப்படையில் பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.

(அ) பத்தொன்பதாம் நூற்றாண்டில் சைவசமய வளர்ச்சியின் பொருட்டு வெளிவந்த 3 பத்திரிகைகளின் பெயர்கள்?

(ஆ) பொதுசனத் தொடர்புச்சாதனம் என்பதன் பொருளை விளக்குக. சாதனங்களின் 03 பெயர்களை தருக?

(இ) அவற்றிலொன்றைத் தெரிந்து, அது சைவசமய வளர்ச்சியின் பொருட்டு ஆற்றிய பணிகளை மதிப்பிடுக?

(3 + 7 + 10 = 20 புள்ளிகள்)

06) வேதாந்த தத்துவ வளர்ச்சியில் மற்றுமொரு பரிமாணமே விசிட்டாத்வைதமாகும். இக் கூற்றினை பொருத்தப்பாட்டினை மேல்வரும் தலைப்புக்களில் ஆராய்க.

(அ) விசிட்டாத்து வைதம் பற்றிய விளக்கம்.

(ஆ) தத்துவத் திரயம் பற்றிய முக்கிய அம்சங்கள்

(இ) பிரபக்தியும் ஆன்ம விடுதலையும்.

(6 + 8 + 6 = 20 புள்ளிகள்)

07) சைவசித்தாந்த ஆன்மக் கோட்பாட்டின் பிரதான அம்சங்களை மேல்வரும் தலைப்புக்களின் அடிப்படையில் விளக்குக?

(அ) ஆன்மா பற்றி சைவசித்தாந்தம் அடிப்படையில் விளக்கம்.

(ஆ) ஆன்மாவும் மும்மலங்களும்

(இ) ஆன்மாவும் இறைவனும்

(6 + 8 + 6 = 20 புள்ளிகள்)

08) “இந்து தத்துவங்களுக்கு முன்னோடியாக அமையும் தத்துவம் சாங்கிய தத்துவமேயாகும்”

(அ) சாங்கியத்தின் காலத்தையும், அதன் பிரதான நூல்களையும் தருக?

(ஆ) சாங்கியம் ஏற்றுக் கொள்ளும் பிராமணங்கள்?

(இ) சாங்கிய தத்துவக் கோட்பாடுகளை சுருக்கமாக குறிப்பிடுக.

(ஈ) சாங்கியக் கோட்பாடுகள் பின்வந்தவேதாந்த, சித்தாந்த தத்துவங்களுக்கு முன்னோடியாக அமைந்தவற்றை சுருக்கமாக விளக்குக?

(4 + 4 + 6 +6 = 20 புள்ளிகள்)